*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*14 10 2025* *TUESDAY* *12.40 PM*
*ஆகாஷவாணி*

***தலைப்புச் செய்திகள்***

- *பிரதமர் திரு நரேந்திர மோடியை, மங்கோலிய அதிபர் திரு Khurelsukh Ukhnaa இன்று சந்தித்து பேச்சு நடத்தினார்.*
- *சர்வதேச அளவில் அமைதியை நிலைநாட்ட இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*
- *உலகத்தரத்திலான சூரியசக்தி மின்உற்பத்தி தகடுகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*
- *பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தில், உரிய அனுமதி பெற்ற பிறகே சமூக ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிட வேண்டும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*
- *வெஸ்ட் இன்டீஸுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<<>>>>>*

*பிரதமர் திரு நரேந்திர மோடியை, மங்கோலிய அதிபர் திரு Khurelsukh Ukhnaa இன்று சந்தித்து பேச்சு நடத்திவருகிறார்.*

*புதுதில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்றுவரும் இந்த பேச்சுவார்த்தையில், பல்வேறு இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*முன்னதாக, இருதலைவர்களும் ஹைதராபாத் இல்ல வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.*

*நான்கு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ள மங்கோலிய அதிபர், இன்று காலை ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திலும் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.*

*<<<<>>>>>*

*சர்வதேச அளவில் அமைதியை நிலைநாட்ட இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று தொடங்கிய ஐ நா அமைதிப்படைக்கு பங்களிப்பை வழங்கும் நாடுகளின் மூன்று நாள் மாநாட்டில் பேசிய அவர், இந்த படைக்கு இந்தியா இதுவரை சுமார் 3 லட்சம் வீரர்களை அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டார்.*

*இதில் பணியாற்றிய 180-க்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் உயிர்தியாகம் செய்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*ஐ நா அமைதிப்படையில் பணியாற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த வீரர்கள், ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.*

*தெற்குசூடான், லெபனான் உள்ளிட்ட நாடுகளுக்கு அனுப்பப்பட்ட அமைதிப்படையில் இந்திய பெண் அதிகாரிகளின் பங்களிப்பு பாராட்டத்தக்கது என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.*

*இந்த மாநாட்டில் பேசிய ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி, ஐ நா அமைதிகாக்கும் பணியில் நவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்க வேண்டியது அவசியம் என்றார்.*

*இத்தாலி, இலங்கை, ஆஸ்திரேலியா, போலந்து உட்பட 32 நாடுகளை சேர்ந்த ராணுவ உயரதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.*

*<<<<<>>>>>>*

*நாட்டில் மக்காச்சோள உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.*

*பஞ்சாப் மாநிலம் லுதியானாவில் செயல்பட்டுவரும் மக்காச்சோள ஆராய்ச்சி மையத்தை பார்வையிட்ட அவர், விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.*

*அப்போது பேசிய அவர், மக்காச்சோளம் உணவு தேவைக்கு மட்டுமின்றி, எத்தனால், ஸ்டார்ச் மற்றும் கால்நடை தீவன உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுவதாக கூறினார்.*

விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கக்கூடிய புதிய ரகங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

உலகத்தரத்திலான சூரியசக்தி மின்உற்பத்தி தகடுகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குஜராத் மாநிலம் Chikhli பகுதியில் செயல்பட்டுவரும் சூரியசக்தி மின்உற்பத்தி தகடுகள் தொழிற்சாலையை தாம் பார்வையிட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்த தொழிற்சாலை நாட்டின் மிகப்பெரிய சூரியசக்தி தகடு உற்பத்தி ஆலையாக திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நவீன தொழில்நுட்பத்துடன் உற்பத்தி செய்யப்படும் இந்த தகடுகள் உயர்ரகத்தை சேர்ந்தவை என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

மக்களையும், பூமியையும் பாதுகாக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்று மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

பிரெஸிலியாவில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் பேசிய அவர், இதுதொடர்பான பாரிஸ் உடன்படிக்கையை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான சமச்சீரான முடிவுகளை மேற்கொள்ள ஏதுவாக, அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைக்கான அவகாசத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள வளரும் நாடுகளுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் திரு பூபேந்தர் யாதவ் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>>

கூகுள் நிறுவனம் ஆந்திர மாநிலத்தில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தரவு மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

*புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், திரு அஷ்வினி வைஷ்ணவ், ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு ஆகியோர் முன்னிலையில இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.*

*இதன்படி கூகுள் நிறுவனம் அடுத்த ஐந்தாண்டுகளில், 15 பில்லியன் டாலர் அளவிற்கு இந்தியாவில் முதலீடு செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<>>>>>>*

*பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவின் அனுமதி பெற்ற பிறகே சமூக ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.*

*இதுதொடர்பாக, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வெளியிடும் விளம்பரங்களுக்கு முன்கூட்டியே சான்றிதழ் பெறுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பணம் கொடுத்து ஊடகங்களில் செய்தி வெளியிடுவது குறித்து மாவட்ட மற்றும் மாநில அளவிலான கண்காணிப்புக்குழுக்கள் தொடர்ந்து கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.*

*<<<<<>>>>>>*

*ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.*

*இம்மாவட்டத்துக்கு உட்பட்ட Machhal பகுதியில் ஊடுருவல் முயற்சி மேற்கொள்ளப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில் ராணுவத்தினரும், உள்ளூர் காவல்துறையினரும் நேற்று ரோந்துப்பணியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் பாதுகாப்புப்படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.*

*இதையடுத்து, பாதுகாப்புப்படையினர் நடத்திய பதிலடி தாக்குதலில் இந்த தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன், அவர்களிடமிருந்து பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டன.*

*அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

*<<<<<>>>>>>*

*அமெரிக்காவின் Space X நிறுவனத்தின் 11-ஆவது Starship ராக்கெட் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.*

*டெக்ஸாசில் இருந்து அனுப்பப்பட்ட இந்த ராக்கெட், இந்திய பெருங்கடல் பகுதியில் வெற்றிகரமாக இறங்கியதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*நிலவுக்கும், செவ்வாய் கிரகத்துக்கும் மனிதர்களை அழைத்துச்செல்லும் பணிக்கு மேம்படுத்தப்பட்ட Starship ராக்கெட்டுகளை உருவாக்கி வருகிறது.*

*<<<<<>>>>>>*

*அந்தமான் கடல்பகுதியில் பெருமளவிலான இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடலுக்கு அடியில் 2 ஆயிரத்து 650 மீட்டர் ஆழத்தில் கண்டறியப்பட்டுள்ள இந்த எரிவாயு, இந்தியாவின் எரிசக்தி உற்பத்தியில் ஒரு புதிய அத்தியாயமாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இப்பகுதியில், தூய்மையான மற்றும் உயர்தரம் வாய்ந்த மீத்தேன் வாயு இருப்பது முதல்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் ஆழ்கடல் ஆய்வுக்கு இந்த கண்டுபிடிப்பு வலுசேர்க்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இதன்மூலம், அந்தமான் கடல்பகுதி இந்தியாவின் அடுத்த ஆழ்கடல் ஆய்வு மையமாக உருவெடுக்கும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி குறிப்பிட்டுள்ளார்.*

*<<<<<>>>>>>*

*வெஸ்ட் இன்டீஸுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிநாளான இன்று 121 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடனும், ஒரு விக்கெட் இழப்பிற்கு 63 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன்*

*தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய இந்தியா 3 விக்கெட் இழப்பிற்கு 124 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*முன்னதாக, இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.*

*இதனையடுத்து பேட் செய்த வெஸ்ட் இன்டீஸ் முதல் இன்னிங்சில் 248 ரன்னுக்கும், இரண்டாவது இன்னிங்சில் 390 ரன்னும் ஆட்டமிழந்தது.*

*<<<<<>>>>>>*

*அறிவுசார் குறைபாடு மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Deepthi Jeevanji தங்கப்பதக்கம் வென்றார்.*

*பிரிஸ்பெனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 200 மீட்டர் ஓட்டப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*<<<<<>>>>>>*